## ஒதுக்கீட்டுத் தலைப்பு 255 - மாவட்ட செயலகம் கொழும்பு

## கொழும்பு மாவட்டச் செயலகம் மற்றும் இதன் கீழான பிரதேசச் செயலகங்களின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2010 ஆம் ஆண்டு

### 1. மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்

வறுமையை ஒழிப்பதற்கான வழிவகுத்தல், தேர்தல் தொடர்புகள், அபிவிருத்தி செயற்றிட்டங்களை திட்டமிடலும், மேற்பார்வை செய்தலும், அனர்த்த முகாமை செயற்திட்டம் மற்றும் புனர்நிர்மாண செயற்திட்டத்தின் நிர்வாகம், மாவட்ட செயற்திட்டத்தின் நிர்வாகம் மற்றும் வழிகாட்டல மற்றும் வருமானம் சேகரித்தல் என்பன மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகளாகும்.

### 2. மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள பிராந்திய செயலகங்கள்

கொழும்பு, இரத்தினபுரி, தெஹிவளை, பாதுக்க, திம்பிரிகஸ்ஸாய, கொலொன்னாவ, கடுவெல, ஸ்ரீ ஜயவர்தனபுர, மஹரகம, மொறட்டுவை, கெஸ்பாவ, ஹோமகம மற்றும் ஹங்வல்ல போன்ற பிரதேசச் செயலகங்கள்.

### 3. வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4. கணக்குகள்

#### 4.1 மொத்த நிதி ஏற்பாடும் செலவினங்களும்

கொழும்பு மாவட்டச் செயலகம் மற்றும் இதன் கீழுள்ள 13 பிரதேசச் செயலகங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடும் ரூபா 528,575,000 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 514,425,594 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும்

பிரதேசச் செயலகங்களின் மேறிய சேமிப்பு ரூபா 14,149,406 ஆனதுடன் இது மொத்த தேறிய ஏற்பாட்டின் 2.6% ஆகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவின விடயம் | மதிப்பீட்டு ஏற்பாடு | தேறிய ஏற்பாடு | செலவினம் | சேமிப்பு | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 401,075,000 | 401,075,000 | 389,543,835 | 11,531,165 | 2.87 |
| மூலதனம் | 97,500,000 | 127,500,000 | 124,881,759 | 2,618,241 | 2.05 |
| | 498,575,000 | 528,575,000 | 514,425,594 | 14,149,406 | 2.67 |

## 4.2 வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பெறப்பட்டிருந்த ஏற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு செயற்பாடுகளுக்காக வேறு அமைச்சுக்கள்/ திணைக்களங்களத்தினால் கீழே காண்பிக்கப்பட்டவாறு ரூபா 4,352,169,612 கூட்டுத்தொகையான ஏற்பாடுகளை வழங்கியிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| செலவினத் தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | பெறப்பட்ட ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | சேமிப்பு/ மிகை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 101 | புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சு | 525,000 | 450,000 | 75,000 |
| 105 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 560,315,827 | 469,615,967 | 90,699,860 |
| 106 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 83,468,340 | 37,711,423 | 45,756,917 |
| 110 | நீதி அமைச்சு | 2,217,216 | 1,763,161 | 454,055 |
| 117 | துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 10,000 | 49,998 | (39,998) |

| | | | | |
|---|---|---|---|---|
| 118 | கமத்தொழில் அமைச்சு | 147,000 | 57,000 | 90,000 |
| 120 | சிறுவகர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு | 7,401,362 | 5,558,068 | 1,843,294 |
| 121 | பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 8,088,901 | 21,102,644 | (13,013,743) |
| 124 | சமூக சேவைகள் அமைச்சு | 9,609,296 | 6,426,751 | 3,182,545 |
| 127 | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 255,000 | 196,250 | 58,750 |
| 133 | தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 6,776,157 | 5,868,129 | 908,028 |
| 134 | தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 88,150 | 88,150 | - |
| 142 | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 461,755 | 818,172 | (356,417) |
| 145 | மீள் குடியேற்ற அமைச்சு | 4,943,236 | 4,306,972 | 636,264 |
| 153 | காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | 185,165,863 | 171,675,261 | 13,490,602 |
| 156 | இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 434,550 | 397,307 | 37,243 |
| 160 | சுற்றாடல் அமைச்சு | 800,000 | - | 800,000 |
| 201 | புத்த விவகாரங்கள் திணைக்களம் | 7,121,020 | 6,839,259 | 281,761 |
| 203 | கிறிஸ்தவ சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | 2,000,000 | 1,000,000 | 1,000,000 |
| 204 | இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | 400,000 | 241,384 | 158,616 |
| 206 | கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | 309,966 | 306,606 | 3,360 |
| 210 | தகவல் திணைக்களம் | 8,000 | 6,160 | 1,840 |
| 216 | சமூக சேவைகள் திணைக்களம் | 6,763,023 | 6,327,054 | 435,969 |
| 217 | நன்னடத்தை பாதுகாவல், சிறுவர் கவனிப்பு, சேவைத் திணைக்களம் | 4,888,569 | 4,365,315 | 523,254 |
| 218 | சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 321,801,469 | 286,400,066 | 35,401,403 |
| 219 | விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களம் | 911,864 | 382,367 | 529,497 |
| 227 | ஆட்பதிவுத் திணைக்களம் | 24,090 | 17,256 | 6,834 |
| 252 | தொகை மதிப்பு புள்ளி விபரத் | 4,550,422 | 2,759,063 | 1,791,359 |

| | | | | |
|---|---|---|---|---|
| | திணைக்களம் | | | |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | 3,125,138,253 | 2,956,383,268 | 168,754,985 |
| 254 | பதிவாளர் நாயகத் திணைக்களம் | 7,545,283 | 6,144,056 | 1,401,227 |
| | கூட்டுத்தொகை | 4,352,169,612 | 3,997,257,107 | 354,912,505 |

## 4.3 கணக்காய்வு மற்றும் கணக்காய்வு நோக்கெல்லை

கொழும்பு, மாவட்டச் செயலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ அறிக்கை 2011 ஆகஸ்ட் 30 ஆம் திகதி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள், இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 4.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரினது பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்படுவது, தயாரிக்கப்படுவது மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது

தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்ற வகையிலான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் நியாயமுறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரிய வகையிலான உள்ளகக்கட்டுப்பாடு தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 4.5 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், கொழும்பு மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களின் நிலை இதன் (அ) மற்றும் (ஈ) இல் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 4.6 முதல் 4.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் தவிர்ந்தவை, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) கணக்குகள் சமர்ப்பித்தல்

மாவட்டச் செயலகத்தினால் 2011 மார்ச் 31 இல் உள்ளவாறு பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

| தலைப்பு | கணக்கின் பெயர் |
|---|---|
| 255 | ஒதுக்கீட்டுக் கணக்கு |

### (ஆ) பாதீட்டு முரண்

17 செலவின விடயங்கள் தொடர்பாக மேலதிக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் 5% இற்கும் 88% இற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

2011 ஏப்ரல் 30 இல் உள்ளவாறும் மாவட்டச் செயலகத்தில் தீர்க்கப்பட்டிராத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,000 ஆகக் காணப்பட்டது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

25501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பாக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,018,854 ஆனதுடன் அந் நிலுவை மீதியை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது.

**4.6 இழப்புகளும் நட்டங்களும்**

ரூபா 263,469 இற்கு மதிப்பிடப்பட்ட 08 வாகன விபத்துக்கள், 1 சொத்து இழப்பு மற்றும் காணாமற் போன 02 விடயங்களும் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் 2011 யூன் 30 இல் உள்ளவாறும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட சிக்கனமற்றதாக நிறுவகத்திற்கு இலாபகரமான முறையில் அல்லாத வகையில் ஏற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் பின்வரும் சந்தர்ப்பங்கள் எடுத்துக்காட்டாக காண்பிக்கப்பட முடியும்.

(அ) மேல் மாகாணசபை பிரதி பிரதான செயலாளர் (பொறியியலாளர்) இனது 41718 (2009) ஆம் இலக்க மற்றும் 2009 மார்ச் 02 ஆம் திகதிய கட்டிட/ வீதி/ நீர்ப்பாசன கட்டணங்கள் பதிவேட்டில் சீ05 கொங்கிரீட் கலவைக்குப் பதிலாக பட்டோலையின் சீ 06 கொங்கிரீட் கலவை

பயன்படுத்தப்பட்டிருந்தமையால் மஹரகம பிரதேச செயலகப் பிரிவில் 10 கைத்தொழில்கள் தொடர்பாக 145.25 கொங்கிரீட் கியூப்களுக்காக ரூபா 746,581 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மஹரகம நகர சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,040,679 கிரயமான 5 வீதிச் செயற்திட்டங்கள் பௌதீக ரீதியாக ஆய்வு செய்யப்படுகையில் அவற்றில் 4 வீதிச் செயற்திட்டங்களின் நீள அகலம் மற்றும் உயரம் அளவீட்டு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அளவுகளைப் பார்க்கிலும் குறைவாக இருந்தமையால் 2.88 கொங்கிரீட் கியூப்களுக்காக ரூபா 91,465 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.8 செயற்பாட்டு திறமையீனங்கள்

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட செயற்பாட்டு திறமையீனங்கள் தொடர்பான பொழிப்பு பின்வருமாறாகும்.

(அ) ஜாதிக சவிய மக நெகும மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 24 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்காக ரூபா 6,269,332 தொகையான ஏற்பாடு மஹரகம பிரதேச செயலகத்தினால் மஹரகமநகர சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டு கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக எவ்வித கண்காணிப்பும்.'. பின்தொடர் நடவடிக்கையும் மஹரகம பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டி – 2006 இன் 5.4.6 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டவாறு மேற்குறித்த நிர்மாணிப்புகளுக்கு உரித்தாக பிரதேச செயலகங்களினால் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய ரூபா 626,933 தொகை அவ் வேலைகளுக்கு உரித்தான குறைபாடுகள் உத்தரவாதக் கால எல்லை முடிவுற முன்னர் மஹரகம நகர சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

## 4.9 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு மற்றும் வெற்றிடம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் கோப்பு நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i). | சிரேஷ்ட நிலை | 01 | 01 | - |
| (ii). | மூன்றாம் நிலை | 82 | 72 | 10 |
| (iii). | இரண்டாம் நிலை | 666 | 562 | 104 |
| (iv). | ஆரம்ப நிலை | 133 | 116 | 17 |
| (v). | ஏனையவை (கிராம உத்தியோகத்தர் மற்றும் பதிவாளர்) | 562 | 506 | 56 |
| | மொத்தம் | 1,444 | 1,257 | 187 |